# +2 October 2015 கணக்குப்பதிவியல்

## பகுதி –அ 1.கோடிட்ட இடங்களை நிரப்புக:-

1. கொடுபட வேண்டிய செலவுகள் இருப்பு நிலைக் குறிப்பின்--------- பக்கத்தில் தோன்றும்.
2. பற்பல கடனாளிகளிடமிருந்து திரும்பப் பெற இயலாத கடன்---------எனப்படும்.
3. 31.03.2012 அன்றைய இருப்பாய்வின் படி முதலீடுகள் 10% ரூ. 500000 முதலீடு மீது வட்டி ரூ40000. முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ---------ஆகும்.
4. நிலை அறிக்கை முறை ------------ முறை எனவும் அழைக்கப்படும்.
5. ஆண்டுத் தொடக்கத்தில் நிலை அறிக்கையைத் தயாரிப்பதன் மூலம் ------------ முதலை அறியலாம்.
6. -------------- காலத்திற்கு பயனளிக்கக் கூடிய சொத்துக்கள் நிலைச் சொத்துக்கள் எனப்படும்.
7. ஒரு சொத்தின் பயனளிப்புக் காலம் முடிந்த பிறகு அதை விற்றால் கிடைக்கக் கூடியதொகை -------------- மதிப்பு எனப்படும்.
8. குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட ------------ முறை பயன்படுத்தப்படுகிறது.
9. சரக்கிருப்பு விற்பனை விகிதம் ------------ என்றும் அழைக்கப்படும்.
10. வங்கி மேல்வரைப் பற்று ------------- பொறுப்புக்கு ஒரு உதாரணம்.
11. ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்க ----------- முறைகள் உள்ளன.
12. நற்பெயர் ஒரு --------------- சொத்து.
13. பொறுப்புகளின் மதிப்பு குறைவது -------------- இனமாகும்.
14. இரு அழைப்புகளிடையே இருக்க வேண்டிய கால இடைவெளி -------------- மாதம் ஆகும்.
15. பொது வெளியீடு ---------- நாட்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்படுவது இல்லை.

## 2.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-

16. தொடக்கச்சரகிருப்புத்தோன்றுவது. அ)இருப்புநிலைக்குறிப்புஆ)இலாபநட்டகணக்கில்இ)வியாபாரக்கணக்கில்
17. 31.3.2010 அன்று இருப்பாய்வின் படி வங்கிக் கடன் 10%(01.04.09) ரூ400000 வட்டிகொடுத்தது ரூ14000 கொடுபட வேண்டிய வங்கிக் கடன் மீதான வட்டி அ) ரூ26000 ஆ) ரூ46000 இ) ரூ36000
18. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்தச் சொத்துகள் ரூ500000. அவருடைய பொறுப்புகள் ரூ 350000. அவருடைய முதல் ---------- ஆகும். அ)ரூ150000 ஆ)ரூ100000 இ)ரூ250000
19. முழுமைபெறாத பதிவேடுகளைப்பயன்படுத்தும்நிறுவனம்:அ) சிறுவியாபாரிகள் ஆ)நிறுமங்கள் இ)அரசு
20. குறைந்த செல் இருப்பு முறையில் தேய்மானம்: அ) ஆண்டுதோறும் குறையும் ஆ) ஆண்டுதோறும் அதிகமாகும் இ) ஆண்டுதோறும் நிலையாக இருக்கும்
21. நீர்மைப் பொறுப்புகள் என்பது: அ) நடப்புப் பொறுப்புகள் ஆ)நடப்புப் பொறுப்புகள்-வங்கி மேல்வரைப்பற்று இ)நடப்புப் பொறுப்புகள்+வங்கி மேல்வரைப்பற்று
22. ஒரு நிறுவனத்தின் மொத்த விற்பனை ரூ875000 இதில் ரூ375000 ரொக்க விற்பனை எனில் கடன் விற்பனை ------------ ஆகும். அ) ரூ1250000 ஆ) ரூ500000 இ) ரூ1200000
23. திட்டப்பட்டியல் என்பது ----------- காலத்திற்கான மதிப்பீடு ஆகும். அ) எதிர் ஆ) நடப்பு/நிகழ் இ)கடந்த
24. கூட்டாளிகளின் நடப்பு கணக்குகள் தொடங்கப்படுவது: அ) நிலை முதல் முறையில் ஆ)மாறுபடும் முதல் முறையில் இ) நிலை முதல் முறையில் அல்லது மாறுபடும் முதல் முறையில்
25. புதிய கூட்டாளி சேர்க்கையில் பகிர்ந்து தரா இலாபமும் காப்பு நிதியும் பகிர்ந்து கொள்ளப்படுவது: அ)புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம் இ) முதல் விகிதம்
26. புதியகூட்டாளிசேர்க்கையில் ------- கணக்கிடப்படுகிறது.அ)ஆதாய விகிதம்ஆ)முதல்விகிதம்இ)தியாகவிகிதம்
27. A,B.C ஆகியோரின் இலாபப் பங்கு முறையே 2/5:2/5:1/5ஆகும். 'c'கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார். A,B ஆகியோரின் புதிய இலாப விகிதம் யாது? அ) 2:2 ஆ) 2:1 இ) 1:2
28. நிறுமமானது பங்குகளை: அ) முகமதிப்பில் மட்டும் வெளியிடலாம். ஆ) முகமதிப்பு மற்றும் முனைமத்தில் வெளியிடலாம். இ) முகமதிப்பு முனையம் மற்றும் தள்ளுபடியில் வெளியிடலாம்.
29. இருப்பு நிலைக்குறிப்பில் முதலினக்காப்பு ------------- தோன்றும்:அ)சொத்துக்கள்ஆ)பொறுப்புகள்இ)இரண்டும்
30. ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ரூ1400 ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறு வெளியீடு செய்த வகையில் தள்ளுபடி ரூ400 எனில் முதலினக் காப்பு ரூ-------- ஆகும். அ)ரூ800ஆ)ரூ1000இ) ரூ600

## பகுதி –ஆ

31. முன்கூட்டிச் செலுத்திய செலவு என்றால் என்ன?
32. நிலை அறிக்கை என்றால் என்ன?
33. மறுமதிப்பீட்டு முறையில் தேய்மானம் கணக்கிடுதல் பற்றி குறிப்பு வரைக:-
34. நடப்பு விகிதத்தினை விளக்குக:-
35. ரொக்கச் செலுத்தல்களுக்கு ஐந்து உதாரணம் தருக:-
36. நற்பெயர் மதிப்பீடும் முறைகளை கூறுக:-
37. பங்கு ஒறுப்பிழப்பு என்றால் என்ன?
38. கீழ்க்கண்டவிவரங்களைக் கொண்டு இலாபம்அல்லதுநட்டத்தைக் கண்டறிக:-தொடக்கமுதல் ரூ 200000, எடுப்பு ரூ 45000, இறுதி முதல் ரூ 250000, கூடுதல் முதல் ரூ 15000.
39. இறுதி சரக்கிருப்பு ரூ600000 குறித்து சரிகட்டுப் பதிவு தருக:-
40. ஒரு நிறுமம் ரூ 100000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. அதன் பயனளிப்புக்காலம் 10 ஆண்டுகள். இறுதிமதிப்பு (எறி மதிப்பு) ரூ10000. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க:-
41. பின்வரும் விவரங்களைக் கொண்டு மொத்த இலாப விகிதத்தைக் கணக்கிடுக:- மொத்த இலாபம் ரூ50000 விற்பனை ரூ550000 விற்பனை திருப்பம் ரூ 50000
42. பின்வரும் விவரங்களில் இருந்து ஜனவரி2011 க்கான ரொக்கத்திட்டப்பட்டியலை தயாரிக்க:- தொடக்க ரொக்கஇருப்பு ரூ10000 ஜனவரியில் ரொக்கவிற்பனை ரூ100000ஜனவரியில் ரொக்க கொள்முதல் ரூ 70000 ஜனவரியில் செலுத்த வேண்டிய வட்டிரூ1000
43. நற்பெயரின்மதிப்புகடந்த நான்குஆண்டுகளின் சராசரிஇலாபத்தில் இரண்டுஆண்டுகொள்முதல்எனக்கொண்டு கணக்கிடுக. நான்கு ஆண்டுகளின் இலாபங்கள்.முதலாம்ஆண்டு(நட்டம்)ரூ10000 இரண்டாம்ஆண்டு இலாபம்

ரூ26000 மூன்றாம்ஆண்டு இலாபம் ரூ 34000 நான்காம் ஆண்டு இலாபம் ரூ 50000

44. ஒரு நிறுமம் ரூ100வீதம் 40000 பங்குகளை ரூ20 எனக்கருதி முனைமத்தில் ரொக்கத்திற்கு வெளியிட்டது. அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன. குறிப்பேட்டுப்பதிவினை தருக:-

**பகுதி - இ**

45. அ)31.03.2011அன்றைய இருப்பாய்வின்படி பற்பலகடனாளிகள் ரூ125000 சரிக்கட்டுதல்கள்: 1)ரூ5000 வாராக்கடன் போக்கெழுதுக. 2)பற்பலகடனாளிகள்மீது 5% வாராஜயக்கடன்ஒதுக்கு உருவாக்குக: 3)கடனாளிகள்மீது 2%தள்ளுபடிஒதுக்கு உருவாக்குக: சரிக்கட்டுபதிவுகள்தந்து இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

ஆ) திரு.பாலாஜி என்பவர் ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்குகளை வைத்திருக்கிறார் 01.04.2010 மற்றும் 31.03.2011 ஆகிய நாட்களில் அவரது சொத்துக்களும் பொறுப்புகளும் கீழ்க்கண்டவாறு இருந்தன.

| | 01.04.2010 ரூ | 31.03.2011 ரூ |
|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 30000 | 60000 |
| அறைகலன் | 30000 | 30000 |
| பற்பல கடனாளிகள் | 75000 | 200000 |
| சரக்கிருப்பு | 70000 | 100000 |
| ரொக்க இருப்பு | 10000 | 20000 |

அவர் அவ்வாண்டில் ரூ 30000 கூடுதல் முதல் இட்டார். தனது சொந்த செலவுக்காக ரூ70000 திரும்ப எடுத்துக் கொண்டார். 2010-2011 ஆண்டிற்கான அவரது இலாபம் நட்டம் கண்டறிய:-

46. தேய்மானம்வரையறு.எவையேனும் 4 தேய்மானகணக்கீடுமுறைகளைதந்துஏதேனும்ஒருமுறையைவிளக்குக:-

47. ரொக்கத்திட்டப்பட்டியல் என்றால்என்ன? ரொக்கத் திட்டப் பட்டியலின் நன்மைகள் யாவை?

48. நற்பெயரைப் பாதிக்கும் காரணிகள் யாவை?

49. ஆனந்த் ஆடையகம் 1.4.2010 அன்று ரூ480000. மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அவ்வியந்திரம் ரூ300000 க்கு விற்கப்பட்டது. ஆண்டுதோறும் 10% நேர்க்கோட்டுமுறையில் தேய்மானம் நீக்கப்பட்டது.ஆண்டுதோறும்கணக்குகள்மார்ச்31ல் முடிக்கப்படுகின்றன. இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்குகளை முதல் மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க:-

50. 31.03.2012 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பிலிருந்து நடப்பு விகிதம் நீர்மை விகிதம் மற்றும் கடனாளிகள் விற்பனை விகிதங்களைக் கணக்கிடுக:-

இருப்பு நிலைக் குறிப்பு 31.03.2012

| பொறுப்பு | ரூ | சொத்துக்கள் | ரூ |
|---|---|---|---|
| முதல் | 65000 | இயந்திரங்கள் | 45000 |
| இலாப நட்ட க/கு | 4000 | சரக்கிருப்பு | 22000 |
| கடனீந்தோர் | 24000 | பற்பல கடனாளிகள் | 19000 |
| | | ரொக்கம் | 5000 |
| | | முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 2000 |
| | 93000 | | 93000 |

நடப்பு ஆண்டின் கடன் விற்பனை ரூ 76000

51. 2012 ஏப்ரல் 1 ஆம் நாள் இளவரசன் அமுதரசன் என்னும் கூட்டாளிகள் இருவர் முறையே ரூ150000 ரூ100000 முதலீட்டு சமமான விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். சரிகட்டுதல்க்கு முன் நிகர இலாபம் ரூ 60000. முதல் மீது வட்டி 6% அமுதரசனுக்கு ஊதியம் ரூ 15000 எடுப்புகள் முறையே இளவரசன் ரூ15000 அமுதரசன் ரூ10000 எடுப்பு மீதான வட்டி முறையே இளவரசன் ரூ500 அமுதரசன் ரூ250 2013 மார்ச் 31 அன்று உள்ள படி கூட்டாளிகளின் இலாப நட்ட பகிர்வு கணக்கையும் மாறுபடும் முதல் கணக்குகளையும் தயாரிக்க:-

52. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் முதலாவது அழைப்பு தொகை ரூ 30 மற்றும் இறுதி அழைப்பு தொகை ரூ 30 செலுத்தப்படாத ரூ100 மதிப்புள்ள 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். இதில் 40 பங்குகள் ரூ3000 க்கு மறுவெளியீடு செய்யப்பட்டன. மறுவெளியீட்டிற்கான பதிவுகளைத் தருக. மேலும் பங்கு ஒறுப்பிழப்பு க/கு முதலின காப்பு கணக்குகளைத் தயார் செய்க:-

**பகுதி -ஈ**

53. அ) திருமதி. மாலதி தனது கணக்கெடுகளை ஒற்றைப் பதிவு முறையில் வைத்திருக்கிறார். 1.4.2010 அன்று அவருடைய முதல் ரூ250000 கூடுதல் தகவல்கள்: தொடக்கச் சரக்கிருப்பு ரூ 125000, பற்பல கடனாளியிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ 25000,ரொக்க விற்பனை ரூ 100000, பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ரூ 30000, பற்பல கடனாளிகள் - தொடக்க இருப்பு ரூ 20000, பற்பல கடனீந்தோர் - தொடக்க இருப்பு ரூ 91500, வியாபாரச்செலவுகள் ரூ 60400 வளாகம் (31.03.2011) ரூ 200000 அறைக்கலன் (31.03.2011) ரூ 3600 இறுதிச் சரக்கிருப்பு ரூ 130000, பற்பல கடனாளிகள்-இறுதிஇருப்பு ரூ 40000, பற்பல கடனீந்தோர் - இறுதி இருப்பு ரூ 100000, இறுதி ரொக்க இருப்பு ரூ 27500 மார்ச்31 2011 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளன்றைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க:-

ஆ) ராமு ரகு என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31.03.2010 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின் வருமாறு :-

| பொறுப்புகள் | ரூ | சொத்துக்கள் | ரூ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 80000 | வங்கி | 10000 |
| பொதுக்காப்பு | 30000 | பற்பல கடனாளிகள் | 30000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் செலவுகள் | 20000 | சரக்கிருப்பு | 20000 |
| முதல் கணக்குகள் | | இயந்திரம் | 40000 |

| | | | | |
|---|---|---|---|---|
| இராமு | 40000 | | நிலமும் கட்டடமும் | 70000 |
| இரகு | 30000 | 70000 | முதலீடுகள் | 30000 |
| | | 200000 | | 200000 |

01.04.2010 அன்று இரவி என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்குட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர். (அ) ரவி ரூ 30000 முதல் கொண்டு வருவது (ஆ) ஏடுகளில் நற்பெயர் ரூ 20000 எனத் தோற்றுவிப்பது (இ) நிலம் - கட்டடத்தை 10% மதிப்பேற்றம் செய்வது (ஈ) சரக்கிருப்பை ரூ3000 குறைப்பது (உ) கொடுபடாப் பொறுப்பு ரூ 2000 உருவாக்குவது மறுமதிப்பீட்டுக் கணக்கு முதல் கணக்குகள் புதிய கூட்டாண்மையின் இருப்பு நிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்கவும்.

54. திருமதி.ஆனந்தியின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட 2011 மார்ச் 31 ம் நாளைய இருப்பு கீழேதரப்பட்டுள்ளன.

| **பற்று இருப்புகள்** | **ரூ** | **வரவு இருப்புகள்** | **ரூ** |
|---|---|---|---|
| கொள்முதல் | 40000 | வங்கிக் கடன் | 100000 |
| எடுப்பு | 35000 | பற்பல கடனீந்தோர் | 50000 |
| வங்கி ரொக்கம் | 20000 | விற்பனை | 110000 |
| கை ரொக்கம் | 60000 | முதல் | 200000 |
| கூலி | 10000 | செ.மா.சீ | 40000 |
| சரக்கிருப்பு (1-4-2010) | 60000 | | |
| கட்டடம் | 100000 | | |
| பற்பல கடனாளிகள் | 30000 | | |
| பெ.மா.சீ | 25000 | | |
| வாடகை | 5000 | | |
| பொதுச் செலவுகள் | 15000 | | |
| அறைகலன் | 100000 | | |
| | 500000 | | 500000 |

சரிக்கட்டுதல்கள்:
(1)அன்று31.03.2011 இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ 50000 (2) கொடுபட வேண்டிய கூலி ரூ 500 (3)முதல் மீது வட்டி 6% அனுமதிக்கப்பட வேண்டும். (4) கட்டடம் மீது 10% தேய்மானம் நீக்கப்படவேண்டும் (5) முன் கூட்டிச் செலுத்திய வாடகை ரூ 1000 2011 மார்ச் 31ஆம நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்ட கணக்கையும் அந்த நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க:-

55. பின்வரும் விவரங்களை கொண்டு: 1) மொத்த இலாப விகிதம் 2) நிகர இலாப விகிதம் 3) சரக்கிருப்பு விற்பனை விகிதம் 4)நிலைச்சொத்துகள் விற்பனை விகிதம் ஆகியவற்றைக் கணக்கீடுக:-

| | **ரூ** |
|---|---|
| விற்பனை | 150000 |
| விற்ற பொருளின் அடக்க விலை | 120000 |
| தொடக்க சரக்கிருப்பு | 29000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 31000 |
| நிலைச் சொத்துக்கள் | 75000 |
| நிர்வாகச் செலவினங்கள் | 15000 |

56. கீழ்க்கணும்விவரங்களில்இருந்து 2012ஏப்ரல் மே ஜீன் மாதங்களுக்கான ரொக்கத்திட்டப்பட்டியல்தயாரிக்க:-

| **மாதம்** | கடன் விற்பனை ரூ | கடன் கொள்முதல் ரூ | அலுவலகச்செலவுகள் ரூ |
|---|---|---|---|
| 2012 பிப்ரவரி | 45000 | 30000 | 8000 |
| 2012 மார்ச் | 55000 | 25000 | 7000 |
| 2012 ஏப்ரல் | 60000 | 20000 | 7000 |
| 2012 மே | 60000 | 40000 | 9000 |
| 2012 ஜீன் | 65000 | 40000 | 9000 |

1)தொடக்க ரொக்க இருப்பு ரூ 5000. 2) சரக்களித்தோர் அனுமதித்தக் கடனின் காலம இரண்டு மாதங்கள். 3) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம் . 4) அலுவலக செலவுகள் அந்தந்த மாதத்தில் செலுத்தப்பட வேண்டும் . 5) ஏப்ரல் மாதத்தில் பெற வேண்டிய பங்காதயம் ரூ1000.

57. சிவா வரையறு நிறுமம் ரூ100 வீதம் 20000 பங்குகளை ரூ10 முனைமத்தில் வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேணடும். விண்ணப்பத்தின் போது ரூ 30. ஒதுக்கீட்டின் போது ரூ 40. (ரூ10 முனைமத்துடன்) முதலாவது அழைப்பின் போது ரூ 20. இறுதி அழைப்பின் போது ரூ 20. 18000 பங்குகள் ஒப்படைக்கப்பட்டது. அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன. குறிப்பேட்டு பதிவுகள் தந்து பங்கு முதல் கணக்கு பத்திர முனைமக் கணக்கு வங்கி கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க:-